# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.302/2015 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா–27 (PW–27) |
| பெயர் | :– | ராஜமாணிக்கம் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

2025–ஆம் ஆண்டு ஜூலைதிங்கள் 07 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினர். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று சேலம் அம்மாப்பேட்டையில் வசிக்கிறேன். நான் கடந்த 02.09.2014-ஆம் தேதியன்று ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளராக பணியாற்றியபோது அந்த காவல் நிலைய குற்ற எண்.317/2014 வழக்கில் இறந்துபோன விஜயன் என்பவரின் சடலத்தை சடலகூராய்வு செய்யக் கோரி காவல் ஆய்வாளர் கொடுத்த கடிதத்தை பெற்று சடலத்தை சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவரிடம் ஒப்படைத்து அடையாளம் காட்டினேன். சடலகூராய்வு முடிந்தபின் சடலத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட வெள்ளை நிற அரைக்கை மேல்சட்டை, சிவப்பு நிறத்தில் ஓரத்தில் கோடுபோட்ட வெள்ளைநிற வேட்டி, நீல நிற ஜட்டி, தங்க மோதிரம் ஒன்று ஆகியவற்றை ஆய்வாளரிடம் கொடுத்தேன். அவர் அதை 91 ஆம் படிவத்தில் கைப்பற்றினார்.

வெள்ளை நிற அரைக்கை மேல்சட்டை **அ.சா.பொ-22** ஆகவும் சிவப்பு நிறத்தில் ஓரத்தில் கோடுபோட்ட வெள்ளைநிற வேட்டி **அ.சா.பொ-23** ஆகவும் நீல நிற ஜட்டி **அ.சா.பொ-24** ஆகவும் தங்க மோதிரம் ஒன்றின் நிழற்படம் **அ.சா.பொ-25** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 02.09.2014 ஆம் தேதியன்று பகல் சுமார் 2.30 மணிக்கு மருத்துவமனையில் சடலத்தை ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நேரம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.